நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC 96/2015

வழக்கு சாட்சி : PW 8 (LW17)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிமாறன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சுந்தரேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | 43/ 2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **21.05.2025**

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் வேதாரண்யத்தில் வசித்து திருக்குவளை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பொறுப்பில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த நவம்பர் மாதம் 2014ம் ஆண்டு முதல் திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பொறுப்பில் இருந்தேன். நாகப்பட்டினம் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக ஏழு ஆவணங்களை சான்றிட்ட நகல்களை கேட்டனர். ஆவண எண்கள்.953/1986, 21/2011, 184/2013, 263/2013, 1010/2013, 1012/2013, 1013/2013 ஆகிய ஆவணங்களை சான்றிட்ட நகல்களாக போலீசாரிடம் கொடுத்தேன். 01.01.1987 முதல் 05.03.2015 வரை உள்ள ஆண்டுகளுக்கான வில்லங்க சான்றிட்ட நகல்களையும் கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் தான் நான் கொடுத்த மேற்படி சான்றிட்ட நகல்களான ஆவண எண்கள்.953/1986, 21/2011, 184/2013, 263/2013, 1010/2013, 1012/2013, 1013/2013 ஆகும். அவைகள் முறையே அ.சா.ஆ.6 முதல் 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் என்னிடம் காட்டப்படும் 01.01.1987 முதல் 05.03.2015 வரை உள்ள ஆண்டுகளுக்கான வில்லங்க சான்றிட்ட நகல் நான் கொடுத்தது தான். அது அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தான செட்டில்மென்ட் ஆவணம் மேற்படி ஆவணத்தை ஏற்படுததி கொடுத்த மற்றும் யாருக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதோ அந்த நபர் உள்ளிட்ட இரண்டு நபர்களும் சம்மதததின் பேரில் தான் இரத்து செய்ய முடியும் என்றால் 2018 ம் ஆண்டு வரை தான செட்டில்மென்ட் ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்த நபர் மட்டுமே அதனை இரத்து செய்ய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிறகு தான் மேற்படி இரண்டு நபர்களும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை இரத்து செய்ய சம்மதிக்க வேண்டும என மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. 2013 ம் ஆண்டிற்கு முன்பே மேற்படி இரண்டு நபர்களும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை இரத்து செய்ய சம்மதிக்க வேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்தது என்றும், நான் மாற்றி மேற்படி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.